கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **26.06.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உயிர்செயலுக்கி மூலக்கூறுகள் கண்டறியும் பயிற்சித் திட்டம் தொடக்க விழா**

தாவரவியல் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியலியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் சார்பில், இயற்கை வழித்தோன்றல் பொருட்கள் மற்றும் உயிர்செயலுக்கி மூலக்கூறுகள் (Bioactive Metabolites) கண்டறியும் தொழில்நுட்பங்களைப் பற்றிய மூன்று நாள் பயிற்சி திட்டம் 2025ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் தேதி, காலை தொடங்கப்பட்டது. இப்பயிற்சி, இளம் ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு முன்னோடியான தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறை அனுபவங்களை வழங்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது.

துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் எல். அருள் அவர்களின் வரவேற்பு உரையுடன் விழா துவங்கியது. அவர் பயிற்சி திட்டத்தின் நோக்கத்தை விளக்கி, தாவரங்களில் உயிர்செயலுக்கி மூலக்கூறுகள் (metabolomics) அணுகுமுறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பின்னர், தாவரவியல் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தகவலியலியல் துறை இயக்குநர் முனைவர் என். செந்தில் அவர்கள், தாவரங்கள், நுண்ணுயிரிகள் மற்றும் பிற இயற்கை வளங்களில் இருந்து உயிர்செயல்பாட்டு பொருட்களை கண்டுபிடிக்கும் முக்கியத்துவம் மற்றும் உணவு, பால் பொருட்கள், மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் விலங்கு ஊட்டச்சத்தில் உயிரியல் ரீதியாக செயல்படும் உயிர்செயலுக்கி மூலக்கூறுகள் மாற்றங்களின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் விதை மைய இயக்குநர் முனைவர் ஆர். உமாராணி தலைமை விருந்தினராகப் பயிற்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். முனைவர் ஆர். உமாராணி தனது உரையில், விதை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க விதை செயலற்ற தன்மை, நீண்ட ஆயுள் மற்றும் சேமிப்பு ஆகியவற்றில் ஈடுபடும் முக்கிய வளர்சிதை மாற்றங்களை அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தமிழகம் முழுவதிலுமுள்ள பல கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களைச் சேர்ந்த பலரும் இதில் பங்கேற்றனர். பயிற்சியில், மாதிரிப் பரிசோதனை, தொற்றிகள் அகற்றும் முறைகள், இரண்டாம் நிலை உயிர்தொகை அளவீடுகள், LC–MS (Liquid Chromatography–Mass Spectrometry) தொழில்நுட்பங்கள் மற்றும் கணினி ஆய்வுகள் போன்றவற்றின் மேல் கவனம் செலுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி, இணை பேராசிரியர் முனைவர் கா. சந்திரகுமார் அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது. இப்பயிற்சி நிகழ்வு, உயிர்தொகை ஆய்வுகளில் புதிய கண்டுபிடிப்புகளையும், அறிவுப் பகிர்வையும் ஊக்குவிக்கும் ஓர் அரிய மேடையாக அமையும் என நம்பப்படுகிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**